# சபை ஒழுங்கு

கூடாரத்தில் ஐந்து இரவுகள் நடந்த ஒரு பெரிய கூட்டத்தை நாங்கள் இப்போதுதான் முடித்திருக்கிறோம், அங்கே, தேவனுடைய கிருபையினாலும் அவருடைய உதவியினாலும், பிரான்ஹாம் கூடாரத்தில் நாங்கள் விசுவாசிக்கிறபடியே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையை வேதவாக்கியங்களின்படி ஒழுங்குபடுத்துவதற்கு நான் கடினமாக முயற்சி செய்துள்ளேன்.

2 முதலாவதாக நான் கூற விரும்புவது என்னவெனில், நான் இல்லாத நேரத்தில் கூடாரத்தின் முழுப் பொறுப்பும் போதகரிடமே எப்போதும் இருக்கும், நான் திரும்பி வரும்போது மட்டுமே போதகரை நாடுகிறேன். ஆகவே, நான் இல்லாத நேரத்தில், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் கீழ், மாற்றங்களைச் செய்வதற்கோ அல்லது எது சிறந்தது என்று அவர் கருதுகிறாரோ அதைச் செய்வதற்கோ அவருக்கு முழுப் பொறுப்பும் இருக்கிறது.

3 இந்த நாளின் ஜனங்களுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதங்களைப் போதிக்கும் ஒரு அப்போஸ்தல சபையில் நாங்கள் விசுவாசங்கொண்டுள்ளோம். நாம் முழு சுவிசேஷத்தை விசுவாசிக்கிறோம், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் உரைக்கப்பட்ட எல்லா அடையாளங்களும் அற்புதங்களும், அவர் மீண்டும் வரும் வரை அவருடைய சபையுடன் இருக்கும் என்றும் விசுவாசிக்கிறோம். நாம் அந்தக் காரியங்களில் விசுவாசங்கொண்டு, அவைகள் ஒழுங்கில் அமைக்கப்பட வேண்டும் என்றும், சபையானது அதனுடைய ஒழுங்கை உடையதாயிருக்கிறது என்றும் விசுவாசிக்கிறோம். ஒவ்வொரு சபையும் அதனுடைய உபதேசங்களையும், ஒழுங்குகளையும், ஒழுக்கத்தையும் உடையதாயிருக்கிறது.

4 நம்முடைய சபையில் சேர்ந்துகொள்பவர்களாக எந்த அங்கத்தினரும் கிடையாது. ஜீவனுள்ள தேவனுடைய உலகளாவிய முழு சபையும் நம்முடைய சகோதர சகோதரிகள் என்றும்; இந்தியானாவின் ஜெஃபர்சன்வில்லில், எட்டாவது மற்றும் பென் தெருவில் அமைந்துள்ள பிரான்ஹாம் கூடாரத்திற்கு, மக்கள் எந்த ஸ்தாபனத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எப்போதும் வரவேற்கப்படுகிறார்கள் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம்.

5 நாம் “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலை” விசுவாசிக்கிறோம், ரோமர் 5:1. ஒரு நபர் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட பிறகு, அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு சமாதானத்தை உடையவனாயிருக்கிறான் என்று நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் இந்த அதே நபர் மது அருந்துதல், புகைபிடித்தல், தான் செய்யக் கூடாத காரியங்களைச் செய்தல்,

மாம்சத்தின் அசுத்தமான பழக்கவழக்கங்கள் போன்ற பழக்கங்களை உடையவனாயிருக்கலாம்.

6 ஆகையால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இந்த நபரைக் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பரிசுத்தமாக்குகிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். அதாவது, எபிரெயர் 13:12 மற்றும் 13-ன்படி நாம் "பரிசுத்தமாக்கப்படுதல்" என்பதை விசுவாசிக்கிறோம், "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனங்களைப் பரிசுத்தமாக்கும்படி வாசல்களுக்குப் புறம்பே பாடுபட்டார்." புதிய ஏற்பாட்டில் பரிசுத்தமாக்கப்படுதல் போதிக்கப்பட்டுள்ளது என்றும், நாம் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் புதிய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் உள்ள விசுவாசிகளுக்காகவே அது நோக்கம் கொண்டது என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

7 மேலும் ஒரு நபர் பரிசுத்தமாக்கப்பட்ட பிறகு, அவனிடமிருந்து அசுத்தமான பழக்கங்கள் நீங்கி, அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பேரில் ஒரு விசுவாசியாயிருக்கிறான், அவனுடைய பழக்க வழக்கங்கள் போய்விட்டன என்றும் நாம் விசுவாசிக்கிறோம்: அப்பொழுது அவர், விசுவாசியை நிரப்புதலாக வரும் "பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு" தகுதியுடையவனாகிறான் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். அதன் பிறகு அந்த விசுவாசி…

8 நான் அதை எத்தனை முறை கற்பித்திருந்தாலும், அது கோழியின் முற்றத்தில் ஒரு கண்ணாடித் துண்டை எடுப்பது போன்றே உள்ளது. *நீதிமானாக்கப்படுதல்* என்பது இருதயத்தில் ஒரு நோக்கத்தோடு "அதை உபயோகிக்க ஆயத்தமாயிருப்பதை" எடுத்துக்கொள்வதாகும். அதைத்தான் தேவன் பாவிக்குச் செய்கிறார். அவன் இன்னமும் அசுத்தமாகவே இருக்கிறான்.

9 பின்பு அவன் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுகிறான். *பரிசுத்தமாக்கப்படுதல்* என்ற வார்த்தை ஒரு கூட்டு வார்த்தையாகும், அதற்கு, "சுத்திகரிக்கப்பட்டு, ஊழியத்திற்கென்று ஒதுக்கி வைக்கப்படுதல்" என்று பொருள்படுகிறது. பழைய ஏற்பாட்டில், பலிபீடம் பாண்டத்தை பரிசுத்தமாக்கியது, அது சேவைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டது.

10 பரிசுத்த ஆவியானவர் அதே பாத்திரத்தைச் சேவையில் வைக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் கிருபையின் மற்றொரு படி அல்ல, ஆனால் இன்னும் அதிகமாக அதே கிருபையானது விசுவாசிகளை அந்த அளவிற்கு நிரப்புகிறது, அது அடையாளங்களையும், அதிசயங்களையும், முதலாம் கொரிந்தியர் 12-ல் கூறப்பட்டுள்ள அப்போஸ்தல வரங்களைப் போல, பரிசுத்த ஆவியானவர் வரத்தை எடுத்துக் கொள்ள வரும்போது, இந்த விசுவாசியின் மூலமாக அவைகள் தாமே வெளிப்படுகின்றன.

11 வேதம், "தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை

அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" என்று போதிக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன், நாம் இவ்வுலகில் பிறக்கும்போது, நாம் இங்கே ஒரே நோக்கத்தினால், அதாவது தேவனுடைய நோக்கத்தினால் அனுப்பப்படுகிறோம். நாம் பெரியவர்களாவதற்கு முன்பே, நாம் இன்னும் பிள்ளைகளாயிருக்கையில், நாம் பெற்றுள்ள தேவனுடைய வரங்கள் அப்பொழுது நமக்குள்ளாக இருக்கின்றன, பரிசுத்த ஆவியின் நிரப்புதல் மாத்திரமே இந்த வரங்களைச் செயல்படுத்துகிறது; ஆனால் நமக்கு ஆதியிலே போதகர்கள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், அந்நிய பாஷைகளில் பேசும் வரங்கள், முதலாம் கொரிந்தியர் 12-ன்படி ஒன்பது ஆவிக்குரிய வரங்களை உடையவர்களாயிருக்கிறோம். இப்பொழுது, இந்த வரங்கள் இன்றைக்கு செயல்படுகின்றன என்றும், அவைகள் ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் இருக்க வேண்டும் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

12 இருப்பினும், அப்போஸ்தல விசுவாசிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்பவர்களுடன், உலகம் முழுவதும் மிகுந்த மதவெறியும் பிணைந்திருப்பதை நாம் கண்டறிந்துள்ளோம். அவர்கள் மற்ற ஒழுங்குகளில் இருப்பது போன்றே, நமக்கும் மதவெறியர் உண்டு. காலங்கள் தோறும் நாம் அப்படிப்பட்டவர்களை உடையவர்களாயிருந்தோம். அவர்கள் அதை அப்போஸ்தல நாட்களில் உடையவர்களாயிருந்தனர்; பவுல் அங்கே கூறினது போல, எப்படியாய் சிலர் வந்து, "வேறு உபதேசங்கள் போற்றவற்றின் படி அவர்களை இணங்கச் செய்தனர்." ஆனால் அவனுடைய சொந்த போதனையில், அவன் போதித்ததல்லாமல், அவன், "வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறெதையாவது போதித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்றான்.

13 ஆகவே, நாங்கள், இங்கு எட்டாவது மற்றும் பென் தெருவில் உள்ள பிரான்ஹாம் கூடாரத்தில், புதிய ஏற்பாட்டின் போதனைகளைப் பின்பற்ற முயற்சிக்கிறோம். ஏனென்றால் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருக்கிறபடியால், அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய தெரிந்து கொள்ளுதலினால் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, அதை ஒழுங்குபடுத்த புறஜாதி சபைக்கு அனுப்பப்பட வேண்டிய ஒரு பாத்திரமாயிருந்தான்.

14 இப்பொழுது, வேதாகமத்தின் அப்போஸ்தல போதனையான, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்," மூழ்கிக் கொடுக்கப்படும் "தண்ணீர் ஞானஸ்நானத்தில்" நாங்கள் விசுவாசங்கொண்டுள்ளோம். பிரான்ஹாம் கூடாரத்திற்கு வரும் அல்லது அங்கத்தினர்களாக உள்ள யாவரும், அவ்வாறு ஞானஸ்நானம் பெற விரும்பினால், எந்த நேரத்திலும் (கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், தண்ணீரில் மூழ்கும்படி கேட்டுக்கொள்ளுதல்), போதகரைக் கலந்தாலோசிக்கலாம்,

அவர்கள் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருந்தால், போதகர் கூடிய விரைவில், அவரால் முடிந்தால், அவர்களுக்கு உடனடியாக ஞானஸ்நானம் கொடுக்கலாம். இது அவர்களை விசுவாசிகளின் ஐக்கியத்திற்குள் கொண்டு வருகிறது. தண்ணீர் ஞானஸ்நானத்தினால் நாம் ஒரு ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்படுகிறோம் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

15 ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நாம் அங்கத்தினர்களுக்குள் கொண்டுவரப்படுகிறோம், இயேசு கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கிறோம், அது உலகம் முழுவதிலும் உள்ளது.

16 இப்பொழுது, நாம் விசுவாசிக்கிற மற்றொரு காரியம், அதாவது, "ஆவியின் வெளிப்படுத்துதல் ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மைக்காகக் கொடுக்கப்படுகிறது." இப்பொழுது, இந்த வரங்கள், போன்றவை, சபையில் கிரியை செய்து கொண்டிருக்கும்போது, ஆவியினால் வரம் பெற்றுள்ள ஜனங்கள் எங்களோடு வந்து தொழுது கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஏங்கி, வாஞ்சிக்கிறோம் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம்.

17 இப்பொழுது, பெரும்பாலான இடங்களில், இந்த வரங்கள் ஜனங்களுக்குள் இருக்கும்போது, இந்த வரங்களை *எப்படி, எப்பொழுது* உபயோகிக்க வேண்டும் என்பதை ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லை, மற்றும், அவ்வாறு செய்வதன் மூலம், ஜனங்கள் ஒரு நிந்தையைக் கொண்டு வருகின்றனர்; இந்த நாட்களில் தேவன் சபைக்கு அளித்துள்ள இந்த அற்புதமான ஆசீர்வாதத்தைக் குறித்து வெளியாட்களையும் அவிசுவாசிகளையும், போன்றவர்களை, பயப்படச் செய்வதே சாத்தான் செய்யக்கூடிய காரியமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

18 பவுல், "நம்மிடையே ஒரு அந்நியன் வந்து, நாம் யாவரும் அந்நிய பாஷைகளில் பேசும்போது, அந்த மனிதன் போய், நாம் 'பைத்தியம்' என்று கூறமாட்டானா? ஒருவன் தீர்க்கதரிசனம் உரைத்து, இருதயத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துவானேயானால், அப்பொழுது அவர்கள் விழுந்து, 'மெய்யாகவே, தேவன் உங்களோடு இருக்கிறார்' என்று கூறுவார்கள்" என்றான்.

19 இப்பொழுது, விசுவாசிகளுக்கு மத்தியில் உள்ள ஆவிக்குரிய வரங்கள் இந்நாளின் ஒழுங்குமுறையாயுள்ளன என்று நாம் விசுவாசிக்கிறோம். ஒரு மனிதன் ஆவியின் ஏவுதலினால் பிரசங்கிக்க முடியும் என்றும், அதன்பின்னர் அல்லது, ஏவப்பட்ட ஒரு போதகனாக இருக்க முடியும் என்றும், அதன்பின்னர் சுகமளிக்கும் வரத்தை அல்லது தீர்க்கதரிசன வரத்தை, அல்லது அந்நிய பாஷைகளில் பேசுதல், அல்லது அந்நிய பாஷைகளை

வியாக்கியானம் செய்தல் அல்லது இது போன்ற வேறு எந்த வரத்தையும் மறுதலிக்க முடியும் என்பதை எங்களால் நம்ப முடியவில்லை.

20 ஆகையால், தேவனுடைய வார்த்தையின் பேரில் உள்ள என்னுடைய விசுவாசம், ஜெஃபர்சன்வில்லில், எட்டாவது மற்றும் பென் தெருவில் உள்ள பிரான்ஹாம் கூடாரம் இந்தவிதமாகச் செயல்பட வேண்டும். முதலாவதாக, நான் கூறுகிற இந்தக் காரியங்கள் இன்றியமையாதவை என்று நான் நினைக்கிறேன் மேலும், அது கர்த்தருக்குள் செழிக்க, பிரான்ஹாம் கூடாரத்தில் இந்தவிதமாக நடத்தப்பட வேண்டும். இவைகள் எப்பொழுதாவது கேள்விக்குட்பட்டால், அதைக் குறித்து கேள்வியுள்ள நபரால் போதகரிடம் செல்ல முடியவில்லையென்றால், என்னிடம் ஆலோசனை கேட்கலாம் அல்லது அவர்கள் போதகரிடம் கலந்தாலோசிக்கலாம். நான் சில பயணங்களை முடித்து விட்டு வீட்டில் இருப்பேனேயானால், எந்த நேரத்திலும் சபையினருக்கு அல்லது போதகருக்கு உதவி செய்ய நான் மகிழ்ச்சியடைவேன். இந்தக் காரியங்கள் வேதப்பிரகாரமாக உள்ளன, அது சபையின் ஒழுங்குமுறை என்று நான் நம்புகிறேன்.

21 முதலாவதாக, ஒவ்வொரு அங்கத்தினரும், அல்லது, ஆராதிக்க வருகிற ஒவ்வொருவரும், பிரான்ஹாம் கூடாரத்தைச் சேர்ந்தவர்கள், இரவில் ஆராதனையில் ஒருவரையொருவர் விட்டுவிட்டு, அவர்கள் இங்கிருந்து செல்லும்போது, அவர்களுடைய இருதயங்கள் ஒருவரையொருவர் வாஞ்சிக்குளவிற்கு…ஒருவருக்கொருவர் அதிகமாய் தெய்வீக அன்பில் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நான் “தெய்வீக அன்பில்” ஒரு உண்மையான விசுவாசியாயிருக்கிறேன். அதுவே பரிசுத்த ஆவியின் அத்தாட்சி என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான். இயேசு, “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்றார். நம் எல்லோருக்காகவும் மரிக்கும்படிக்கு இயேசு கிறிஸ்துவை பூமிக்கு அனுப்பினதே தேவனுடைய அன்பு என்று நாம் விசுவாசிக்கிறோம். “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” இங்கே நித்திய *ஜீவன்* என்பது “தேவனுடைய சொந்த ஜீவன்” ஆகும். ஏனென்றால் நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாகிறோம்; அது ஆபிரகாமின் வித்தாயிருந்து, ஆபிரகாமுக்கு இருந்த விசுவாசத்தை நமக்கு அளிக்கிறது, அவன் விருத்தசேதனம் பண்ணப்படுவதற்கு முன்பே தேவனை விசுவாசித்தான்.

22 இப்பொழுது, அடுத்த காரியம், இந்த ஆராதனையாளர்கள்,

"இந்த வரம் பெற்ற ஜனங்களை ஒன்றுகூடிச் சந்திக்க வேண்டும்" என்று நாங்கள் நம்புகிறோம், அந்நிய பாஷை பேசுதல், ஜனங்கள் வெளிப்பாடுகள் மற்றும் வியாக்கியானங்களைப் பெறுதல் போன்றவை. இந்த அங்கத்தினர்கள், அல்லது, இந்த விசுவாசிகள், சரியாகக் கூறினால், ஆராதனைகள் துவங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக, குறைந்தது நாற்பத்தைந்து நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரத்திற்கு முன்பாகக் கூடி வர வேண்டும். சபை அதிகாலையில் திறக்கப்பட வேண்டும், இந்த இரவுகளில் விசுவாசிகள், ஆராதனைகள் தொடங்குவதற்கு குறைந்தது நாற்பத்தைந்து நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரத்திற்கு முன்பாவது கூடிவர வேண்டும்.

23 பிரான்ஹாம் கூடாரத்தில் எல்லா நேரங்களிலும் ஆவியால் நிரப்பப்பட்ட இசைப்பேழையை இசைப்பவர் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், அவர்கள் அதிகாலையில் வந்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, மிருதுவாக இசைத்து, மிக மென்மையான, ஆவிக்குரிய இசையில், "இரட்சகர் மரித்த சிலுவையில் பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்காக நான் அங்கே அழுதேன்; அங்கே என்னுடைய இருதயத்தில் இரத்தம் பூசப்பட்டது, அவருடைய நாமத்திற்கு மகிமை!" என்பது போன்று இசைக்க வேண்டும். அந்த வரிசையில் ஏதோ ஒன்று. *என் தேவனே, உம்மண்டையில்.* "காலங்களின் கன்மலை, எனக்காகப் பிளந்தது." அல்லது, *சிலுவைக்கு அருகில்* அல்லது அந்த ஒழுங்கின் பேரில்; மென்மையாய், மெதுவாக, அவன் பரிசுத்த ஆவியின் பேரில் தொடர்ந்து தியானித்துக் கொண்டிருக்கையில், அவன் அல்லது அவள், அது எதுவாயிருந்தாலும் சரி.

24 அதன்பின்னர் உள்ளே ஆராதிக்க வருகிறவர்களை, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட வரவேற்பாளர்கள் அல்லது உதவிக்காரர்களால் மட்டுமே செய்யக்கூடிய உபசரிப்புடனும், ஜீவனுள்ள தேவனுடைய சபை தொடர்ந்து இயங்குவதைக் காணும் அன்போடும் வரவேற்று, அவர்களுடைய...அவர்களுடைய மேலங்கிகளையும் தொப்பிகளையும் மாட்டி, இருக்கைகளுக்கு வழிகாட்ட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

25 இந்த ஆராதனையாளர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு, குறுக்கே பேசிக்கொண்டு, சபையில் சத்தமிட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

26 அவர்கள் ஒன்று சேர்ந்து வர வேண்டும். முதலாவதாக, மௌன ஜெபத்தில் ஒருகால் பீடத்தண்டை ஒரு சில நிமிடங்கள் நழுவிச் செல்லுங்கள். சத்தமாக ஜெபிக்க வேண்டாம், நீங்கள் வேறொருவருக்கு இடையூறு விளைவிக்கிறீர்கள்; மௌன ஜெபம், நீங்கள் ஆராதனையில் இருக்கிறீர்கள். அது உள்ளே பதியட்டும். உங்களுடைய ஆவியில் ஆராதியுங்கள், அதன்பின்னர் உங்களுடைய இருக்கைக்குத் திரும்புங்கள்.

27 இல்லையென்றால், நீங்கள் பீடத்தண்டை செல்ல வேண்டியதில்லை. நீங்கள் உள்ளே சென்று உங்களுக்கு இருக்கையை எடுத்துக்கொண்டு, உட்கார்ந்து இசையைக் கேளுங்கள்; உங்களுடைய கண்களை மூடி, உங்களுடைய தலையை வணங்குங்கள்; அமைதியாக இருந்து, தேவனை ஆராதியுங்கள்.

28 அப்படியானால் ஆவியானவர் மற்றவருக்கு ஒன்றை வெளிப்படுத்த வேண்டுமானால், அல்லது—அல்லது யாராவது அந்நிய பாஷைகளில் பேசும் ஒரு இடத்திற்கு ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால், அப்பொழுது இந்த நபர் எழும்பிச் செய்தியை அளிக்க வேண்டும். அர்த்தம் உரைக்கும் வரையில் ஒவ்வொருவரும் அமைதியாயிருக்க வேண்டும்.

29 வியாக்கியானம் வரும்போது, அது வேதவாக்கியங்களை வெறுமனே மேற்கோள் காட்டுவதாகவோ அல்லது அர்த்தமற்ற ஏதோ ஒன்றாய் இருக்கக் கூடாது. அது சபைக்கு அனுப்பப்பட்ட ஒரு செய்தியாக இருக்க வேண்டும், இல்லையென்றால் அது மாம்சத்தில் இருக்கும் என்று நாம் நினைக்கிறோம்; நாம் அதை அதிகமாகக் காண்கிறோம். இப்பொழுது, ஆவியானவர், “சபையின் பக்திவிருத்திக்காக” மாத்திரமே பேசுவார் என்று நான்—நான் நினைக்கிறேன்.

30 இப்பொழுது, ஒருவேளை, இந்த ஒழுங்கின் பேரிலான ஒரு செய்தியாக அது இருக்கலாம். ஒருவேளை இந்நேரத்தில் ஜனங்கள் கூடிக்கொண்டிருந்திருக்கலாம், சில சுகவீனமானவர்கள் உள்ளே வந்திருக்கலாம். ஒருக்கால் ஒரு மனிதன் முடங்கிப்போய் அல்லது ஏதோ ஒரு காரியமாய் படுத்துக்கிடந்திருக்கலாம். நீங்கள் அவரை இதற்கு முன்பு கண்டதேயில்லை. ஆனால் வியாக்கியானம் வரும்போது, அது இந்த ஒழுங்கின்படி இருக்கும்; அதற்கு அர்த்தம் உரைக்கும்போது, அல்லது சற்று முன்னர் பேசிய ஒருவர், “பாருங்கள், **கர்த்தர் உரைக்கிறதாவது**, எங்கள் மத்தியில் இருக்கிற மனிதன் ஒரு *குறிப்பிட்ட-குறிப்பிட்ட* இடத்திலிருந்து வந்திருக்கிறான்” என்று கூறி அந்த இடத்தை விவரிப்பார். மேலும், “மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட காரணத்தால் அவர் முடங்கிப் போனார்,” என்றோ அல்லது அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம், சூழ்நிலையைப் பொறுத்து, சொல்வார், “அவன் பொல்லாங்கான காரியத்தைச் செய்தான்” என்பது போல, “தன்னுடைய மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு, அவர்களை விட்டு ஓடிப்போனான். அவன் ஒரு தாங்கு சட்டத்திலிருந்து விழுந்துவிட்டான்” அல்லது அந்த வரிசையில் போன்ற ஏதோ ஒன்று, “காயமடைந்துவிட்டான், அது அவனை முடக்கிவிட்டது. **கர்த்தர் உரைக்கிறதாவது**, அவன் அதைக் குறித்து மனந்திரும்பி, தன்னுடைய மனைவியினிடத்தில் சென்று, அவளோடு தன்னை ஒப்புரவாக்கினால், அப்பொழுது அவன் இப்பொழுது சுகமடைந்து தன்னுடைய குடும்பத்திற்குத்

திரும்புவான்.”

31 அதன்பின்னர் யாராவது ஏதாவது ஒன்றைக் கூறுவதற்கு முன்பு, கட்டிடத்தில் குறைந்தது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் அல்லது ஜனங்கள் இருக்க வேண்டும், அவர்கள் சுவிசேஷ உபதேசத்தில் ஆவிக்குரிய பிரகாரமாக திடமானவர்களாயும், ஆவியைப் பற்றிய நல்ல பகுத்தறிவைக் கொண்டவர்களாயும், எழும்பி, “அது கர்த்தரால் உண்டானது” என்று கூறுவர்.

32 இந்தக் காரியம் நடைபெறவில்லையென்றால், அப்பொழுது அந்நிய பாஷைகள் சபையில் குறிப்பிடப்படக் கூடாது. ஒரு நபர் அந்நிய பாஷையில் பேசினால், பவுல், “அதாவது அர்த்தம் உரைப்பவர் இல்லாமற்போனால்,” மற்றும் பல. “அவர்கள் வீட்டில் பேசட்டும்,” அல்லது அவர்கள் எங்கிருந்தாலும், “ஏனென்றால், அவர்கள் தங்களையே ஆசீர்வதித்துக் கொள்ளுகிறவர்களேயன்றி, அது சபையின் பக்தி விருத்திக்காக அல்ல.”

33 அதன்பின்னர் இந்த நபர், பேசி, அதற்கு அர்த்தம் உரைத்தபிறகு; அதன்பின்னர் பரிசுத்த பவுலின் உபதேசத்தின்படி இரண்டு அல்லது மூன்று நியாயாதிபதிகள், அது “இரண்டு அல்லது மூன்று நியாயாதிபதிகளால் நியாயந்தீர்க்கப்பட வேண்டும்.”

34 அப்படியானால், எவரை அழைக்கிறாரோ, அவர் போகட்டும், அவர், ஒரு குறிப்பிட்ட நபரை அல்லது போதகரை அல்லது வேறு யாரோ ஒருவரை நியமிக்கலாம், சுகவீனமாயிருக்கிற அல்லது பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நபர்மீது கைகளை வைக்க, அவர்கள் சுகமடைவார்கள். அப்படியானால் போதகரோ அல்லது மற்ற நபரோ, அது பரிசுத்த ஆவியினால் நியமிக்கப்பட்ட யாராயிருந்தாலும் சரி “விசுவாசமுள்ள ஜெபத்தை ஜெபிக்க” செல்ல, ஆவியானவர் கூறியுள்ளபடியே அந்த நபருக்கு ஊழியம் செய்ய அவர்கள் போகட்டும். அதன்பின்னர் அந்த நேரத்தில், அந்த நபர்மீது…பரிசுத்த ஆவியானவர் என்ன கூறியிருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் அருளியிருக்கிறபடியே அது உடனடியாகச் சம்பவிக்கும்.

35 அப்பொழுது ஜனங்கள் களிகூர்ந்து, நன்றியுள்ளவர்களாயிருக்க, தேவனைத் துதித்து ஆராதிக்க முடியும், ஏனென்றால் தேவன் ஆராதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

36 அதன்பின்னர் அவர்கள்—அப்பொழுது அவர்கள் தங்களுடைய தலைகளை வணங்கி, மீண்டும் ஜெபத்தில் இருக்க வேண்டும், பரிசுத்த ஆவியானவர் இந்த வரங்கள் வெளிப்பட வேண்டுமென்று விரும்புகிற மற்றொரு செய்தி உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

37 அதன்பின்னர் எப்பொழுதாவது ஒரு நபர் அந்நிய பாஷையில் பேசி, அதற்கு அர்த்தம் உரைத்தால், எந்தக் காரியம் செய்யப்பட வேண்டுமென்று கூறப்பட்டதோ அதைச் செய்ய நியாயாதிபதிகள் அந்த நபரை அனுப்பி, அது நிறைவேறாமற்போனால், அப்பொழுது

அவர்கள் முழு குழுவும் பீடத்தண்டை செல்ல வேண்டும் அந்த ஆவியை அவர்களிடத்திலிருந்து எடுத்துப்போட தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும், ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு ஆவியை எவருமே விரும்பமாட்டார்கள். அது தவறானதாயிருக்கும் என்றும், அது சத்துருவினுடையதாய் இருக்கும் என்றும், தேவனுடையதல்ல என்றும் நாம் அறிவோம், ஏனெனில் தேவனால் உண்மையை மாத்திரமே கூற முடியும். நீங்கள் இதை, இந்தப் புதிய ஒழுங்கைத் துவங்குவதற்கு முன்பு, அது சபையினால் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படட்டும்.

38 பிறகு, ஒருக்கால், அது இந்தவிதமான ஏதோ ஒரு காரியமாக இருக்கலாம், அந்தச் செய்தி ஒரு குறிப்பிட்ட சகோதரனுக்கு, ஒருக்கால், “ஒரு இரயில் பாதையில் வசித்து வந்தவர்” அல்லது ஏதோ ஒன்று, “அவரை வெளியேறச் செய்வதற்காக, ஏனென்றால் சாலையில் ஒரு அழிவு சம்பவிக்கப் போகிறது” அல்லது ஏதோ ஒன்று அல்லது அந்த ஒழுங்கின்படி இருக்கப்போகிறது என்று கூறலாம்.

39 நியாயாதிபதிகள் சபைக்குப் பேச அனுமதி அளித்தபிறகு, அல்லது சற்று முன்னர் சென்ற இந்தச் செய்தியை உபயோகிக்க, அவர்களுடைய நியாயத்தீர்ப்பு, “அது தேவனால் உண்டானதானால்,” அப்படியானால் அது நிறைவேறுகிறதா என்று கவனித்துப் பாருங்கள்.

40 அது நிறைவேறினால், தேவனுக்கு நன்றி செலுத்துங்கள், உங்கள் இருதயத்தில் அவரைக் குறித்து மிகவும் கனிவுள்ளவர்களாயிருங்கள்—கனிவுள்ளவர்களாயிருங்கள். அவருக்குத் துதியையும், ஆராதனையையும் செலுத்தி, தாழ்மையாயிருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தாழ்மையாயிருங்கள்.

41 உங்களுடைய போதகரையோ அல்லது நீங்கள் வழிபடும் சபையை விடவோ, ஒரு விஷயத்தைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியும் என்பது போன்ற கர்வத்தை ஒருபோதும் வளர்த்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் அந்த ஸ்தலத்திற்கு சென்றால், அப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் மற்றுமொரு ஸ்தலத்தை தொழுதுகொள்ளும்படிக்கு நான் ஆலோசனை கூறுவேன். ஏனென்றால், வேதாகம முறைமைக்குப் புறம்பான எந்தக் காரியத்தையும் ஒருபோதும் அனுமதிக்க வேண்டாம் என்று நான் போதகரைக் கேட்டுக்கொள்கிறேன், நாம் அதை இங்கே சபையில் பார்த்திருக்கிறோம். அதன்பின்னர் இந்த வரங்கள் கிரியை செய்து, தொழுதுகொள்பவர்கள் அந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். வார்த்தையின்படி அது சரியாகத் தொடரப்பட்டால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக ஒரு வல்லமையான, அற்புதமான சபை செயல்படுவதை நீங்கள் காண்பீர்கள்.

42 இப்பொழுது, அதன்பின்னர் அடுத்த காரியம் சம்பவிக்கும், இந்த ஜனங்கள் இந்த நேரங்களில் ஒழுங்கை மீறுகிறவர்களுக்கு, ஒரு உதவிக்காரர் அல்லது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு வாயிற்காப்போன் தங்களுடைய இருதயத்தில் ஏராளமான கிருபையைப் பெற்று, அந்த நபரிடம் சென்று, பயபக்தியோடும், தகப்பனைப் போன்றும், இந்தவிதமாக அவர்களைத் திருத்துவார். அல்லது, போதகர், அது யாராயிருந்தாலும், உதவிக்காரர்கள் அவ்வாறு செய்வது மிகவும் இன்றியமையாததாயிருக்கும்; இந்த ஆவிக்குரிய ஆராதனைகள் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், போதகர், ஜெப அறையில் அல்லது எங்காவது ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

43 இந்தச் செய்திகள், எந்தச் செய்திகளும் இல்லையென்றால், எந்த வெளிப்பாடுகளும் இல்லையென்றால், ஜனங்கள் விரும்பினால், தேவனுடைய மகிமைக்காக மட்டுமே ஒரு சாட்சியை எழுந்து வழங்கப் பாக்கியம் பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் இதைச் செய்யக் கடமைப்பட்டவர்கள் அல்ல, ஆனால் செய்தியோ அல்லது பாடல் ஆராதனையோ துவங்குவதற்கு முன்பு சாட்சி கூறப்பட வேண்டும், அல்லது வேறெந்த காரியமானாலும், இந்த வழிபாட்டு ஆராதனைகளில் சாட்சிகளை அளிக்க வேண்டும்.

44 சபை, இதைச் செய்வதில், உங்களுக்குப் புரிகிறதா, வார்த்தையானது போதிக்கப்படுவதற்கு முன்னரே, நீங்கள் முழு சபையையும் ஆராதிக்கும் ஆவியில் வைத்திருக்கிறீர்களா? அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வார்த்தைக்குள்ளாகச் சென்று, உங்களுடைய ஆராதனையின் ஒரு உறுதிப்படுத்துதலாய் இருக்கும்படி, வார்த்தையின் மூலமாகத் தேவனை வெளிப்படுத்துகிறார்.

45 இப்பொழுது, இதற்குப் பிறகு, போதகர் வர வேண்டிய நேரம், செய்திகள் போய்க் கொண்டிருக்கையில்…போதகர் சரியாக ஏழு முப்பது மணிக்கு…அல்லது ஏழே முக்கால் மணிக்கு வர வேண்டும். மேலும் இந்தச் செய்திகள் இன்னும் தொடர்ந்தால், போதகர் தனது…படிப்பறையிலிருந்து வெளியே வருவதற்கு முன்பு, அல்லது அவர் எங்கு இருந்தாலும், மேடையில் அவருடைய இடத்திற்கு வரும்போது, ஒரு சகோதரர் அவருக்கு வழிகாட்ட வேண்டும், ஏனென்றால் பரிசுத்தவான்கள் போதகர் மேடைக்கு வரும்போது, அது ஆராதனைக்கான அவருடைய நேரம் என்பதை அறிந்திருக்கிறார்கள். அது வரங்களின் எல்லா வெளிப்படுத்துதல்களுக்கும் ஏராளமான, தேவனுடைய ஆவியைச் சபைக்குக் கொண்டு வருவதற்காகப் போதிய நேரத்தை அளிக்கிறது.

46 அவிசுவாசி எவனாகிலும் அங்கே இருக்க நேர்ந்தால், அவன் ஒழுங்கற்றவனாய் இருந்தால்; அன்பான இருதயம் கொண்ட ஒரு நபர் அவர்களிடத்தில் வருவார், உதாரணமாக ஒரு வாயிற்காப்போன் அல்லது ஒரு உதவிக்காரர் அவர்கள்—

அவர்கள் பயபக்தியோடு…காத்துக்கொள்ளும்படி, அல்லது ஆராதனை ஒழுங்கில் இருக்கும்போது பயபக்தியுடன் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படட்டும். ஏனென்றால், ஆவியானவர் கட்டிடத்தில் இருக்கிறார், சபையின் பக்தி விருத்தியடைவதற்காகத் தேவனுடைய வரங்கள் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நபரிடம் அன்பில் கூறப்பட வேண்டுமேயன்றி, கடுமையாக அல்ல. அவர்கள் குடித்துக் கொண்டிருந்த ஒரு ஒரு நிலையில், அல்லது கீழ்ப்படியாமை அல்லது கர்த்தருடைய ஆராதனைக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய மற்ற ஏதோ ஒரு காரியமாய் இருந்தாலொழிய, அந்த வரங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன; அப்பொழுது அந்த நபர், ஒரு பக்கமாக வழிநடத்தப்பட வேண்டும், பின்பக்க அறைகளில் ஒன்றில், அல்லது எங்காவது, பேசப்பட்டு, அன்பாகக் கையாளப்பட வேண்டும்.

47 இப்பொழுது, போதகர் மேடைக்கு வரும்போது…போதகர் மேடைக்கு வந்தபிறகு, இங்குள்ள பிரான்ஹாம் கூடாரத்தில், போதகர் சபையாரை குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு நல்ல பாடல்களைப் பாட வழிநடத்த வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். அநேகர் சபையில்…கிரியை செய்ய முயற்சிக்கும்போது, அது தொல்லையை மாத்திரமே கொண்டு வருகிறது என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம். நான் சபையில் போதகராக இருந்தபோது நானே பாடல்களை வழிநடத்தினதுபோல நடத்தும்படி பரிந்துரைப்பேன். போதகர் தாமே அவ்வாறு செய்தால், அது ஒரு நல்ல காரியமாய் இருக்கும் என்று நான் உணருகிறேன்.

48 எல்லா ஜெபக் கூட்டங்களிலும், அவர்கள் ஒன்றாகக் கூடியிருக்கும் ஜெபக் குழுக்களிலும், போதகர் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கூட்டங்களுக்கு வழி நடத்தும் அதிகாரம் எந்தத் தனிப்பட்ட நபரிடமும் ஒருபோதும் விடப்படக் கூடாது. ஏனெனில், அவர்கள் போதனையில் வழிதவறிச் சென்று, பின்னர் அதை மீண்டும் சபைக்குள் கொண்டு வருவதையும், பல சமயங்களில், ஜீவனுள்ள தேவனுடைய சபைக்குச் சொந்தமில்லாத மதபேதங்களையும் மற்றவற்றையும் கொண்டு வருவதையும் நாங்கள் கண்டிருக்கிறோம். மேய்ப்பர் எல்லா ஜெபக் கூட்டங்கள், போன்றவற்றிலும், சபைக-…கூடும் இடங்களிலும் இருக்க வேண்டும்.

49 *இந்த* வழியில் ஒரு குழு உள்ளது, *அந்த* வழியில் ஒன்று உள்ளது என்று கூறுவதன் மூலம், போதகர் ஒருபோதும் கூட்டத்தில் ஒரு பட்சத்தில் சார்ந்திருக்கக் கூடாது. போதகர் இவ்விரண்டிற்கும் இடையே நின்று, அவர்களிடத்திற்குச் சென்று, அவர்களை உடனடியாக ஒப்புரவாக்க வேண்டும். அவரால் அவர்களை ஒப்புரவாக்க முடியவில்லையென்றால், அவர் தன்னோடு ஒரு உதவிக்காரரை அழைத்துச் செல்லட்டும். அப்பொழுது

அவர்கள்—அவர்கள் போதகர் அல்லது உதவிக்காரருக்கு செவிகொடுக்கவில்லையென்றால், அப்பொழுது அது சபைக்குக் கூறப்பட வேண்டும், இயேசு கூறியது போல, “அவர்கள் உங்களுக்கு ஒரு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பார்களாக.” இயேசு, “பூலோகத்திலே நீங்கள் கட்டுகிறது எதுவோ அதை நான் பரலோகத்தில் கட்டுவேன், நீங்கள் பூமியிலே கட்டவிழ்ப்பவைகளை பரலோகத்திலும் கட்டவிழ்ப்பேன்” என்றார்.

50 இப்பொழுது, போதகர் மேடைக்கு வரும்போது, போதகர் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு பாடல்களாவது நடத்திவிட்டு, வார்த்தைக்கு நேராகச் செல்ல வேண்டும்.

51 இந்த நீண்ட சாட்சிக் கூட்டங்களுக்கு, ஒவ்வொருவரும் எழுந்து, ஒரு வார்த்தை பேசுவதற்கு நேரமில்லை. அது பிரான்ஹாம் கூடாரத்தில் செழிப்படைவதில்லை.

52 இந்த ஒலிநாடாவை கேட்டுக்கொண்டிருக்கிற எந்த ஜனங்களாவது, உங்களுக்கும், அது உங்களுடைய சபையில் செழித்திருந்தால், சரி, அது முற்றிலும் சரிதான். நாங்கள் அதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், அது உங்களுடைய சபையில் செழித்தோங்குகிறது.

53 ஆனால் இங்குள்ள எங்களிடத்தில், அது அவ்வாறு இல்லை, அது குழப்பத்தை மாத்திரமே ஏற்படுத்துகிறது. நான் இங்கு இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் போதகராகப் பணியாற்றுகிறேன், அது குழப்பத்தை மட்டுமே ஏற்படுத்துகிறது என்பதை நான் கண்டறிந்துள்ளேன். உங்களிடம் ஒரு சாட்சி இருந்தால், அதைச் சபை மக்களுக்கு முன்பாக…ஆவியானவர் ஆசிர்வதித்துக் கொண்டிருக்கிறதான அது போன்ற நேரங்களில் கூறுங்கள்.

54 சாட்சி கொடுப்பதற்கான உண்மையான வழி சபையில் அல்ல, வெளியே இருண்ட இடங்களில் உள்ளது. இருளாயிருக்கிற இடத்தில் உங்களுடைய வெளிச்சம் பிரகாசிக்கட்டும். சாலையோர விடுதிகள், வெவ்வேறு இடங்களுக்கும் செல்லுங்கள், அங்கே பாவமும் காரியமும் குவிந்து கொண்டிருக்கிறது, அப்பொழுது உங்களுடைய வெளிச்சம் பிரகாசிக்கட்டும். அதைச் செய்ய வேண்டிய இடம் உண்டு.

55 ஆனால், இருப்பினும், கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களுக்குச் சில மகத்தான விசேஷித்த ஆசீர்வாதங்களை அளித்திருப்பாரானால், அல்லது நீங்கள் ஜனங்களிடம் சொல்ல வேண்டிய ஏதோ ஒரு காரியம், அதை மற்ற ஆராதனையின் நேரத்திலோ, அதாவது ஆராதனைக்கு முந்தைய நேரத்திலோ, தேவனுடைய வார்த்தை கொண்டுவரப்படுவதற்கு முன்பாக, ஆரம்பக் கட்டத்தில், அல்லது ஆவியானவர் ஆசீர்வதித்து, சாட்சிகளையும், வெளிப்பாடுகளையும், அந்நிய பாஷைகளையும்

வியாக்கியானங்கள், முதலானவற்றையும், பரிசுத்தவான்களின் ஆராதனையில் அருளும்போது செய்யுங்கள்.

56 அப்பொழுது போதகர், இந்தப் பாடலை வழிநடத்தின பிறகு, உடனடியாகச் சபையை ஜெபத்தில் வழிநடத்தி, மேடையில் நின்றுகொண்டே, அவரே ஒரு சபையோருக்கான ஜெபத்தையும் நடத்தி, மற்றவர்கள் தங்களுடைய தலைகளை ஜெபத்தில் வணங்கும்படி கேட்பார்.

57 இது ஒரு மகத்தான ஆசீர்வாதமாயும், சபையில் கிரியை செய்வதில் ஒரு அதிகக் கட்டளையாயும் இருப்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

58 அதன்பின்னர் அடுத்ததாகப் போதகர் செய்ய வேண்டிய காரியம். ஜனங்களுடைய இருதயங்களின் அநேக இரகசியங்களை வெளிப்படுத்தும் வரங்களோடு அவர்கள் ஒரு உண்மையான ஆவிக்குரிய கூட்டத்தை உடையவர்களாயிருந்தால், கூட்டத்தில் வரங்களைக் கொண்டு செய்யப்பட வேண்டிய காரியங்கள்; அப்பொழுது தேவனுடைய ஆவி கூட்டத்தில் உள்ளது, அப்பொழுது போதகர் தேவனுடைய ஆவியைக் கண்டறிவது மிகவும் சுலபம் (அது ஏற்கனவே கூட்டத்தில் உள்ளது) தேவனுடைய வார்த்தையின் பேரில், அவர் வாசித்து, பிரசங்கிக்கத் துவங்குகிறார். அதன்பின்னர் போதகர் அங்கே நின்றுகொண்டு, பரிசுத்த ஆவியானவர் தம் இருதயத்தில் வைக்கும் எதையும், தாம் செய்ய விரும்பும் எதையும் பிரசங்கிக்கிறார்.

59 ஆனால் சபையோர் மட்டும்…அவர் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், உண்மையாகவே அவர்கள் களிகூரலாம் அல்லது வார்த்தை வரும்போது, “ஆமென்” என்று கூறலாம். ஆனால் எழும்பி அந்நிய பாஷைகளில் செய்திகளைக் கூறி, அதற்கு அர்த்தம் உரைத்தல், பரிசுத்த ஆவியானவர் போதகர் மூலமாகக் கிரியை செய்து கொண்டிருக்கையில், வேதம் அதைக் கண்டிக்கிறது, “தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே” என்று கூறப்பட்டுள்ளது.

60 அப்பொழுது போதகர் இந்தத் தனிப்பட்ட நபரை அழைத்து, அவர்கள் பயபக்தியுள்ளவர்களாயும், தங்களுடைய ஸ்தானத்தில் இருக்கும்படியும் கேட்டுக்கொள்ள வேண்டும். போதகர் தன்னைக் குறித்து மிகவும் தாழ்மையான ஒரு மனிதனாயிருக்க வேண்டும், ஆனால் மிகவும் தாழ்மையாயில்லாமல், சபையில் தவறு நடப்பதை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கண்டபோது, அவர் கயிறுகளைப் பின்னி, அவர்களைச் சபையிலிருந்து விரட்டியடித்ததுபோல அவர் இருக்க வேண்டும். இப்பொழுது தேவனுடைய சபையானது நியாயத்தீர்ப்பின் வீடாக இருக்கிறது, மேய்ப்பரே சபையில் மிக உயரிய அதிகாரத்தில் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரைத் தவிர அப்போஸ்தல சபையில் மூப்பரே மிக உயரிய காரியமாயிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய செய்தியை நேராக மூப்பரிடம் கொண்டு வருகிறார், மூப்பர் அதை ஜனங்களுக்கு அளிக்கிறார்.

61 பரிசுத்தவான்களும் அவர்களுடைய வரங்களும், முதலாவதாக, வழிபடுவதற்கும் ஒன்றுகூடுவதற்கும் தகுந்த இடத்தைப் பெறுவார்கள், இது (நான் முன்பே கூறியிருக்கிறது போல) போதகருக்காக, கட்டிடத்தில் கர்த்தருடைய ஆவியைக் கொண்டுவருகிறது. அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவர் மூலமாகக் கிரியை செய்வதை மிகவும் எளிதாக்குகிறது, ஒரு நல்ல ஆவிக்குரிய கூட்டம் அவருடைய போதனைக்கு முந்தினபோது; அதன்பின்னர் பரிசுத்த ஆவியானவர் வார்த்தைக்குள்ளாகச் சென்று வார்த்தையைப் போதிக்கிறார்; வரங்களினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

62 அதன் பிறகு பீட அழைப்பு விடுக்கப்படும்போது, பரிசுத்த ஆவியானவரின் கிரியையின்படியும், தேவனுடைய வார்த்தையின்படியும், அநேகர் கண்டு அறிந்துகொள்வார்கள், நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய சபையாயிருக்கிறீர்கள் என்று போதகர் அதை வலியுறுத்துகிறார். பவுல் பண்டைய காலத்தில் கூறினது போல, “அவன் விழுந்து, ‘மெய்யாகவே தேவன் உங்களோடிருக்கிறார்’” என்று கூறுவான்.

இப்பொழுது, இந்தக் காரியங்களில், அது பயபக்தியோடு செய்யப்பட வேண்டும்.

63 இப்பொழுது போதகர் (இந்த நேரத்தில், நம்முடைய சகோதரன் நெவில் அவர்களுக்கு), நினைவிருக்கட்டும், அவர் சபையின் முழு தலைவராக இருக்கிறார். வேறுவிதமாகக் கூறினால், பரிசுத்த ஆவியானவர் தனக்குக் கட்டளையிடும் எதையும், அதாவது அவர் சொல்லச் சொல்லும் எதையும் பயன்படுத்துவதற்கு சகோதரர் நெவில்லுக்கு உரிமை உண்டு. சபையில், தேவன் அவரை வழிநடத்தும் எந்தக் காரியத்தையும் செய்ய அவருக்கு உரிமையுண்டு. அவருடைய உதவிக்காரர் குழுவின் மேலும் அவருக்கு உரிமையுண்டு. அவர் உதவிக்காரர் குழுவையும், தர்மகர்த்தாக்களையும் அல்லது—அல்லது இசைப்பேழையை இசைப்பவர்களை மாற்ற முடியும், அல்லது பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுவதை உணர்ந்து, சபையில் உள்ள மற்ற எந்த உத்தியோகத்தையும் அவர் விரும்புவதுபோல மாற்றிக்கொள்வார். அவர் ஒரு தேவபக்தியுள்ள மனிதன் என்று (நான் நினைக்கிறேன்) அவர் என்ன செய்தாலும், நான் அதை அடையாளம் கண்டு கொள்வேன். அது கர்த்தருடையதாயிருக்க வேண்டும் என்றும், அதையே அங்கீகரிப்பேன் என்றும் நான் அடையாளங் கண்டு கொள்வேன், ஆகையால் அவர் வழிநடத்தப்படுவதை உணருகிறவிதமாகச் சபையை நடத்த அது அவருக்கு அதிகாரத்தை அளிக்கிறது. இப்பொழுது, அல்லது, சபையில் உள்ள எந்த உத்தியோகத்திலும், அவர் ஜனங்களோடு, பதவிகளை மாற்ற

விரும்பினால், அதைச் செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு. இது, எப்பொழுதுமே அருமையாக இருக்கும் என்றும், ஒருபோதும் உபயோகிக்கப்பட வேண்டியதில்லை என்றும் நான் நம்புகிறேன்.

64 இப்பொழுது, கர்த்தர் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக. நீங்கள் அறிந்த வரையில் இது நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஒவ்வொருவரையும் கவனிக்கட்டும்.

65 சபையின் ஒவ்வொரு அதிகாரியும் அவருடைய கடமையை நிரப்பட்டும், நீங்கள் எப்படி சபையில் உங்களுடைய உத்தியோகத்தை வகித்தீர்கள் என்பதற்கு தேவன் உங்களைப் பொறுப்பாளியாக்கப் போகிறார் என்பதை அறிந்திருக்கிறோம். ஒவ்வொருவரும் கணக்கொப்புவிக்க வேண்டும்.

66 சபையோருக்கும், எங்களுடைய சபையில் உள்ள அருமையான வரங்களைப் பெற்ற பரிசுத்தவான்களுக்கும், தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்களுக்கும், அல்லது அந்நிய பாஷைகளில் பேசவோ அல்லது வியாக்கியானிக்கவோ, அல்லது வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளவோ, நீங்கள் சபையில் இருப்பதற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்தில் கூறியுள்ளதை அவர் நிரூபிக்கும் ஒவ்வொரு காரியத்திலும் நாங்கள் உங்களுக்கு முழு ஒத்துழைப்பை அளிப்போம். நாங்கள் உங்களை நேசிக்கிறோம். இந்த வரங்கள் உங்களுக்குள் உள்ளன என்றும், உங்களுக்குச் சரியான தருணம் இருந்தால், மகத்தான ஊழியக்காரர்களாக எங்கள் மத்தியில் இருப்பீர்கள் என்ற வேதப்பூர்வமான விளக்கத்தையும் அளிக்கிறோம். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக என்பதே என்னுடைய உத்தமமான ஜெபமாகும்.

67 கிறிஸ்தவர்களே, இந்த ஒலிநாடாவை கேட்டது முதற்கொண்டு, நான் விட்டுவிட்ட ஒரு காரியத்தை நான் கண்டிருக்கிறேன், அது இதுதான்: அதாவது ஜனங்கள் அந்நிய பாஷைகளில் பேசிக்கொண்டிருக்கையில், அது வேதவாக்கியங்களின்படி "இரண்டு அல்லது மூன்று பேர்கள்" என்பதன் பேரில் அடங்குவதாக இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு ஆராதனையிலும் இரண்டு அல்லது மூன்று செய்திகள் மாத்திரமே அளிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு வேத வாக்கியங்களின்படி, அதாவது, "இவர்கள் போக்கில்; இது இரண்டு அல்லது மூன்று மாத்திரமே இருக்க வேண்டும்." ஆகையால் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வேதாகமத்தில் அதை வழிநடத்தியிருக்கிற விதமாகவே, அதன்படியே, நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்வீர்களாக. என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில், இதைச் செய்வதற்கான வழி இதுவேயாகும். பவுல், "அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும்," என்றான். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

58-1007 சபை ஒழுங்கு
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org